அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 315

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
22 நவம்பர், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

தீவுக்குள்ளான சம்பளமற்ற லீவு தொடர்பான
கடப்பாட்டுச் சேவைக் காலத்தை மீளவாய்தல்.

தீவினுள் கல்வி நோக்கத்துக்கோ பயிற்சிக்காகவோ சம்பளமற்ற லீவு வழங்கப்பட்ட ஓர் அரசாங்க உத்தியோகத்தர் கடப்பாட்டுச் சேவை புரிவதாகக் கீழ்க்காணுமாறு உடன்படிக்கையொன்றினைச் செய்து கொள்ளுதல் வேண்டும்!

(1) ஒரு வருடத்துக்குக் குறைந்த காலப்பகுதிக்குக் கடப்பாட்டுச் சேவை கிடையாது.

(11) ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கான சம்பளமற்ற லீவு பற்றிய /வகையில் கடப்பாட்டுச் சேவைக்காலமானது சம்பளமற்ற லீவுக் காலத்தை ஒத்ததாக இருக்கும்.

2. கடப்பாட்டுச் சேவைக் காலமானது கிட்டிய முழு மாதத்துக்குக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

3. தாபனக் கோவையின் 1/-ஆம் அத்தியாயத்தின் 2-ஆம் பிரிவின் பிரகாரம் தீவினுள் அரசாங்க சேவைக்குப் புறத்தே விடுவிக்கப்படும் ஒரு அரசாங்க உத்தியோகத்தருக்கும் இந்த ஏற்பாடுகள் பொருந்தும்.

4. மேற்குறித்த கடப்பாட்டுச் சேவைக் காலங்கள் ஏலவே ஓர் அரசாங்க உத்தியோகத்தர் இணங்கியுள்ள எந்த முறிக்கும்/உடன்படிக்கைக்கும் பொருந்தும்.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.